**தலைப்பு 147 – பிரதேச அபிவிருத்தி அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பிரதேச அபிவிருத்தி அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் பிரதேச அபிவிருத்தி அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பிரதேச அபிவிருத்தி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் *அமைச்சினால்* வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் *அமைச்சின்* நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) ஆம் பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) பிரதேச அபிவிருத்தி அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது 01 மாத தாமதத்தின் பின்னர் 2019 ஏப்ரல் 01 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் | 2019 ஏப்ரல் 01 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |

### 1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டின் வருமானமல்லாத பெறுவனவாக திறைசேரியிடமிருந்து கட்டுநிதி பெறுவனவாக ரூபா 271,130,853 குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் மாதாந்த கணக்குப் பொழிப்புக்களின் பிரகாரம் அது ரூபா 268,310,000 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 2,820,353 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நிதிச் செயலாற்றல் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுநிதி பெறுவனவு தொடர்பான தகவல் ACA 3 மாதிரியின் பிரகாரம் திறைசேரியிடமிருந்து நேரடி பெறுவனவு ரூபா 268,310,000 ஆக இருந்தது. உரிய ஆண்டினுள் வெவ்வேறு நிதி மூலங்களிலிருந்து அமைச்சினால் சேகரிக்கப்பட்ட தொகை ரூபா 2,820,853 மாத்திரமாக இருந்தது. அவ்வாறு சேகரிக்கப்பட்ட தொகையுடன் கட்டுநிதியின் பகுதியாக கருதப்படும் ஆதலால் அத்தகைய சகல பெறுவனவுகளையும் சேகரித்து கட்டுநிதி பெறுவனவாக நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) மீளாய்வாண்டின் ஏனைய பெறுவனவுகளாக ரூபா 1,907,853 குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த கணக்குப் பொழிப்புக்களின் பிரகாரம் அது ரூபா 4,615,288 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 2,707,435 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் நிதிச் செயலாற்றல் கூற்றில் திறைசேரி கட்டுநிதியின் கீழ் ரூபா 271,130,853 என பதிவு செய்யப்பட்டுள்ளது. அது தயாரிக்கப்பட்டுள்ள விதம் ACA-3 பின்னிணைப்பு மூலம் தரப்பட்டுள்ளது. அப்பின்னிணைப்பில் மாதிரிக்குரிய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதில் கட்டுநிதி பெறுவனவு திறைசேரியிலிருந்து கிடைக்கும் தொகை மற்றும் ஏனைய மூலங்களிலிருந்து கிடைக்கும் தொகை என்பன மொத்தமாக காட்டப்பட வேண்டும். அதன் பிரகாரம் திறைசேரியிலிருந்து ரூபா 268,310,000 மற்றும் ஏனைய மூலாதாரங்களிலிருந்து கிடைத்த ரூபா 2,820,853 தொகை கூட்டப்பட்டு ரூபா |

| | | | |
|---|---|---|---|
| | | | 271,130,153 என நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவுகளாக காட்டப்பட்டிருந்தது. |
| (இ) | மேற்படி (ஆ) பந்தியின் பிரகாரமான கணக்காய்வு அவதானிப்பு காரணமாக நிதிச் செயலாற்றல் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 113,418 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிச் செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுநிதி மீதி ரூபா 485,298,744 சரியானதென குறிப்பிடுகின்றேன். நிதிச் செயலாற்றல் கூற்றின் 54 ஆம் பக்கத்தின் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுநிதி இணக்க கணக்கின் மூலம் இக்கட்டுநிதி மீதி தயாரிக்கப்பட்டுள்ள முறை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கணக்காய்வினால் குறிப்பிடப்பட்டுள்ள மீதி தயாரிக்கப்பட்ட விதத்தை இனங்காண முடியாதுள்ளது. |

### 1.6.3 நிதி நிலைமை தொடர்பான கூற்று

நிதி நிலைமை தொடர்பான கூற்று தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் நிதியல்லாத சொத்துக்களாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 92,287,698 ஆக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட திறைசேரி கணனி அச்சிடும் பிரதியின் பிரகாரம் அது பூச்சியமாக இருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 3.1 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை பெறுமதியுடன் திறைசேரி அச்சீட்டுக் குறிப்பின் பெறுமதிகளுடன் இணங்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. CIGAS நிகழ்ச்சித்திட்டம் ஊடாக சொத்துக்கள் தொடர்பாக அறிக்கையிடும் போது இடம்பெற்ற தவறுகளை சீராக்குவதற்காக நடவடிக்கை எடுத்த காரணத்தினால் திறைசேரி பதிவுகளின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபரகணங்கள் என்பவற்றின் பெறுமதி பூச்சிய பெறுமதியை எடுத்திருந்தது. தற்போது அத்தகவல்கள் நாளது வரையாக்கப் பட்டு வருவதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன் |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டின் போது வாடகை அடிப்படையில் பெற்றுக் கொண்டிருந்த அலுவலகக் கட்டிடத்திற்காக வெளித்தரப்பினருக்கு வழங்கிய முற்பணம் மற்றும் வைப்புக்களுக்குரிய ரூபா 312,156,151 பெறுமதியான | 2016 ஆகஸ்ட் 03 ஆந் திகதி அரச கணக்குகள் சுற்றறிக்கையின் இலக்கம் 250/2016(i) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 250/2016(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை 2016 ஆகஸ்ட் 03 ஆந் திகதியே வெளியிடப்பட்டுள்ளதுடன், வெளித்தரப்பினருக்கான முற்பணக் கொடுப்பனவினை கணக்கீடு செய்வது தொடர்பாக அதன் மூலம் |

| | | |
|---|---|---|
| வாடகை மற்றும் வேலை முற்பணக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இந்த அமைச்சிற்குரிய கணக்காய்வு விசாரணையின் பிரகாரம் கட்டிட வாடகைக்காக முற்பணம் மற்றும் வைப்புத் தொகை சுற்றறிக்கை வெளியிடுவதற்கு முன்னரே செலுத்தியிருந்தது. ஆதலால் சுற்றறிக்கை ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட முடியாதிருந்தது. இது தொடர்பாக திறைசேரி அரச கணக்குகள் திணைக்களத்திடம் விசாரித்த போது உரிய சுற்றறிக்கை பணம் செலுத்திய திகதிக்கு பின்னர் வழங்கப்பட்டுள்ளதால் இம்முற்பணத்தை கொடுப்பனவு செய்வதற்குரிய சுற்றறிக்கை ஆலோசனைகள் பொருத்தமில்லையென அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 1.6.4 காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்று தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) செயற்பாட்டு நடவடிக்கைகளில் உருவான வருமானமல்லாத பெறுவனவுகளாக ரூபா 270,992,728 காண்பிக்கப்பட்டிருந்தது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த ஆண்டு பொழிப்பின் பிரகாரம் அது ரூபா 272,925,287 ஆக இருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும் | வரவுப் பதிவுகள் பெறுவனவுகள் விடுபட்டு காசுப்பாய்ச்சல் கூற்று மாத்திரம் உள்ளடக்கப்பட்டு நிதிக்கூற்றுக்கள் அறிக்கைக்கு செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவான காசுப்பாய்ச்சல் கணிப்பிடப்பட்டுள்ளது. கணக்காய்வினால் வரவு குறிப்பு பெறுவனவுகள் கருத்திற் கொள்ளப்பட்டு காசுப்பாய்ச்சல் இனங்காணப்பட்டுள்ளது. |
| (ஆ) செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவாகிய தனிப்பட்ட வேதனங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினமாக ரூபா 215,008,263 குறிப்பிடப்பட்டிருந்தது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த கணக்குப் பொழிப்புக்களின் பிரகாரம் அது ரூபா 219,105,272 ஆக இருந்தது. | - மேற்படி - | வரவுப் பதிவு கொடுப்பனவை கருத்திற் கொள்ளாமல் காசுப் பாய்ச்சலில் ஆட்களுக்குரிய சம்பள செலவினம் உள்ளடக்கப்பட்டுள்ளது. கணக்காய்வினால் வரவுக் குறிப்பு கொடுப்பனவும் கருத்திற் கொள்ளப்பட்டு காசுப்பாயச்ச்ல் இனங்காணப்பட்டுள்ளது. |
| (இ) செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவாகிய காசுப் பாய்ச்சலில் ரூபா 398,727 ஆன வைப்புக்கள் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளாக | - மேற்படி - | பொது வைப்புக்கள் கணக்கில் பெறுவனவாக பதிவு செய்யப்பட்டுள்ள முழுத் தொகையும் அவ்வாண்டில் |

| | | | |
|---|---|---|---|
| | காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. இப்பகுதி நிதி செயலாற்றல் அறிக்கையில் அறிக்கையிடப்பட்டுள்ளது. காசுப் பாய்ச்சல் கூற்றின் வைப்புக் கணக்கில் வேறுபாடு மாத்திரம் அறிக்கையிடப்பட வேண்டும். |
| (ஈ) | அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கடனாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 4,930,945 மற்றும் கடன் மீள் பெறுவனவுகளின் பெறுமதியான ரூபா 3,119,473 தொகை முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான வருமானம் காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | முற்பணக் கொடுப்பனவிற்காக கிடைத்த பணமும் 1 ஆவது விசாரணையில் குறிப்பிடப்பட்ட வருமானமல்லாத பெறுவனவுகளில் உள்ளடக்கப் பட்டுள்ளது. முற்பணக் கொடுப்பனவு பெறுவனவுகளும் வரவு குறிப்பு மூலமான பெறுவனவொன்றாக இருப்பதாக உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.6.5 முற்பணக் கணக்கு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஏப்ரல் 07 ஆந் திகதிய பரீட்சை திணைக்களத்திலிருந்து பிராந்திய அபிவிருத்தி அமைச்சிற்கு இடமாற்றம் பெற்றுவந்த அலுவலக உதவியாளர் 2017 யூன் 22 ஆந் திகதிய முதல் கணக்கு அறிக்கையிடப்படாமல் இருந்த போதிலும் அவருக்கு 2017 யூலை மாத சம்பளமாக ரூபா 33,719 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அச் சம்பளத்தை மீளாய்வாண்டில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முறையற்ற கொடுப்பனவினை குறைப்பதற்காக தேவையான முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகள் தயாரிக்கப்பட்டு இவ்வாறான கொடுப்பனவுகளுக்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள முழுச் சம்பளத்தையும் மீளக் கொடுப்பனவு செய்யுமாறு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மேற்குறித்த அலுவலக உதவியாளர் வேலையை விட்டுச் சென்று 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1½ வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 85,895 ஆன கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம் கடன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பல சந்தர்ப்பங்களில் கடன் தொகையை மீள செலுத்துமாறு அறிவிக்கப்பட்டது. பொறுப்பேற்றல் மேற்கொள்ளப்படாமையால் வழக்கு தொடருவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறியத் தருகின்றோம். |

**1.6.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமை** | | |
| | ரூபா | | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 104(3) மற்றும் 104(4) | நட்டம் மதிப்பீடு செய்யப் பட்டிருக்கவில்லை. | ஆரம்ப அறிக்கை 07 நாட்களுக்குள் உள்ளாகவும் வாகனம் விபத்துக்குள்ளாகி அது தொடர்பாக 03 மாதங்களுக்குள் முழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் விபத்து இடம்பெற்ற 185 நாட்கள் கடந்து இருந்த போதிலும் அவ்வாறான அறிக்கை அல்லது இடம்பெற்ற நட்டத்திற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் இனங்காணப் பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணக் கோவையின் 104(3) மற்றும் 104(4)இன் பிரகாரம் ஆரம்ப அறிக்கை மற்றும் முழு அறிக்கைகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | WP-CAQ-2508 ஆம் இலக்க கௌரவ அமைச்சரின் ஆலோசகராக கடமை புரிந்த உத்தியோகத்தரால் பயன்படுத்தப்பட்ட வாகனமாக இருந்ததுடன் 2018 ஒக்தோபர் 26 ஆந் திகதி அமைச்சுக்கள் மாற்றப்பட்டதுடன் மீண்டும் அவ்வாகனம் அமைச்சிற்கு கையளிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலேயே நட்டம் இடம்பெற்றதாக அறிக்கையிடப் பட்டதாகும். எவ்வாறாயினும், அதன் பிறகு இடம்பெற்ற அமைச்சுக்கள் மாற்றத்துடன் உரிய வண்டியின் நட்டம் மற்றும் சேதங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு தாமதமாகியிருந்தது. 2019 பெப்ரவரி 07 ஆந் திகதி அவ்வாகனம் விசேட பிரதேச அபிவிருத்தி அமைச்சிற்கு கையளிக்கப்பட்ட துடன் இந்நிறுவனம் அறிவூட்டப்பட்டு |

அவ்வண்டியின் நட்டத்திற்குரிய மதிப்பீட்டு அறிக்கையொன்று பெற்றுக் கொள்ளப்பட்டு எதிர்காலத்தில் நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | பிரதான கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக 02 செலவின விடயங்கள் மற்றும் 01 மூலதன விடயத்திற்காக ரூபா 2,900,000 ஆன நிதி மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் 91 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான வீச்சில் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | நடைமுறை ரீதியாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பாதீட்டு விலகலை குறைத்துக்அெகாள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 மே மாதத்தின் போது கௌரவ பிரதேச அபிவிருத்தி அமைச்சரின் விடயப்பரப்பிற்கு நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் விடயமும் ஒன்றிணைக்கப்பட்டு நிலைபேறான அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி என புதிய விடயப்பரப்புடன் கூடிய அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அதன்போது நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சிற்காக 2018 ஆம் ஆண்டிற்குரிய 161 ஆம் இலக்க செலவின தலைப்பின் கீழ் நிதிஏற்பாடு மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன், பிரதேச அபிவிருத்தி அமைச்சிற்காக 147 ஆம் இலக்க தலைப்பின் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அவ்விரண்டு செலவினத் தலைப்புக்களும் மேற்படி குறிப்பிட்ட திருத்தத்தின் போது ஒரு அமைச்சின் கீழ் நியமிக்கப்பட்ட காரணத்தினால் செலவினம் மேற்கொள்ளும் போது 147 ஆம் இலக்க செலவின தலைப்பிலிருந்து கீழ் செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செலவினம் 161 இன் கீழ் செலவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) | மீளாய்வாண்டில் செலவின விடயமொன்றினதும் 2 மூலதன செலவின விடயங்களுக்காகவும் | - மேற்படி - | - மேற்படி - |

ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 650,000 ஆன மொத்த நிதி ஏற்பாடும் சேமிக்கப் பட்டிருந்தது.

**2.2 வங்கிக் கணக்கு செயற்படுத்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் viii இன் பிரகாரம் 7041590 ஆம் இலக்க வங்கி கணக்கின் மீதி ரூபா 71,729,655 என காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அமைச்சின் புத்தகங்களின் பிரகாரம் வங்கி மீதி ரூபா 7,172,655 ஆக இருந்தது. | அமைச்சிடமுள்ள பதிவேடுகளை சரியாக பேணுவதன் மூலம் நிதிக்கூற்றுக்களில் சரியான தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது வங்கிக் கூற்றின் பிரகாரம் மீதிகளை பதிவு செய்யும் போது தவறுதலாக தவறான இணக்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக ஏற்றுக் கொள்ளுகின்றேன். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த செயலாற்றல் அறிக்கை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் விசேட அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு முதலீட்டு மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 100 மில்லியனான நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்நிதி ஏற்பாடுகளிலிருந்து குளங்கள் புனரமைத்தல், பாலங்களை நிர்மாணித்தல், வீதி அபிவிருத்தி, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், போன்ற துறைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் எவ்வித விசேட அபிவிருத்தி செயற்திட்டமும் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. | ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த வரையறுக்கப்பட்ட வளமான அரசின் நிதிஏற்பாட்டை ஆக்கபூர்வமாகவும் செயற்திறனாகவும் முதலீட்டு மேம்படுத்தல் செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு ஈடுத்தப்பட வேண்டும். | அமைச்சிற்கு கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை கருத்திற் கொண்டு முதலீட்டு மேம்பாட்டிற்காக ரூபா 100 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. முதலீட்டாளர் ஒருவர் முதலீடொன்றை மேற்கொள்வதற்காக இணங்கும் போது அவரை ஊக்குவிப்ப தற்காக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் நோக்கில் இந்நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது செயற்படுத்துவதற்குள்ள மட்டத்தில் முதலீட்டு |

| | | | |
|---|---|---|---|
| | | | சந்தர்ப்பங்களுக்கு இணக்கப்பாடு ஏற்படாத காரணத்தினால் அதற்காக ஒதுக்கிடு செய்த நிதிஏற்பாட்டை முகாமை செய்வதற்காக ஏனைய பொருத்தமான செயற்திட்டங்களில் அந்நிதி ஏற்பாட்டை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இந்த அமைச்சின் பியவர கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர் களுக்கும் வியாபாரிகளுக்கும் தேவையான நிதி வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. தற்போது செயற்படுத்தப்படும் Enterprice Sri Lanka நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டது. உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி ஊடாக கைத்தொழிலாளர்களுக்கு மறைமுகமாக பல வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. |
| (ஆ) | முதலீட்டு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்காக 03 மாவட்டங்களை மேவுகை செய்யும் வகையில் ரூபா 25,999,285 நிதிஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், அங்கு செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் நிதி செயன்முன்னேற்றம் பூச்சியமாக இருந்தது. அம்பாறை பியகம பிரதேச பிரிவிற்கு ரூபா 10 மில்லியன் பெறுமதியான 02 செயற்திட்டங்களை செயற்படுத்த முடியாதென மாவட்ட செயலகம் ஆண்டின் இறுதியின் போது அறிவித்திருந்தது. | - மேற்படி - | அமைச்சிற்கு கட்டுப்படுத்த முடியாத காரணத்தின் பேரில் இச் செயற்திட்டங்களை செயற்படுத்த முடியாமல் இருந்தது. ரூபா 15,999,285 ஆன கிரயமான 2 செயற்திட்டங்கள் சீரற்ற காலநிலை காரணமாக செயற்படுத்த முடியாமல் போயிருந்தது. கம்பஹா மாவட்டத்தின் பியகம பிரதேச செயலகப் பிரிவில் ரூபா 10 மில்லியனான 2 செயற்திட்டங்களை செயற்படுத்த முடியாமல் போயிருந்ததாக மாவட்ட செயலாளர் அறிக்கையிட்டிருந்தார் பிரதேச சபையின் இணக்கப்பாடொன்று இல்லாமையால் இச்செயற்திட்டத்தை செயற்படுத்த முடியாதிருந்தது. |
| (இ) | முதலீட்டு மேம்பாட்டு நிகழ்ச்சித் | - மேற்படி - | மட்டக்களப்பு மாவட்ட |

| | | | |
|---|---|---|---|
| | திட்டங்களின் கீழ் செயற்படுத்தப்படும் செயற்திட்டமொன்றான மட்டக்களப்பு அம்புத்தாய் குளத்தின் இரண்டாம் கட்டமான கதவு மற்றும் மூடி புனரமைப்பு செய்து நிர்மாண நடவடிக்கைகளுக்காக மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு ரூபா 15 மில்லியன் நிதிஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் கேள்வி அளிப்புச் செய்யப்பட்டதன் பின்னர் நிர்மாணம் இடைநடுவில் விட்டுவிடப்பட்டிருந்தது. | | செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட விளக்கங்களின் பிரகாரம் சீரற்ற காலநிலை காரணமாக அம்புத்தாய் குளத்தின் புனரமைப்பு வேலைகளை நிறைவுசெய்ய முடியாதிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஈ) | குருணாகல் மற்றும் கம்பஹா ஆகிய இரண்டு மாவட்டங்களை மேவுகை செய்யும் வகையில் அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு முறையே ரூபா 999,285 மற்றும் ரூபா 5,000,000 ஆன நிதிஏற்பாடு குருணாகல் மற்றும் கம்பஹா மாவட்ட செயலகங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அந் நிதிஏற்பாடு மீண்டும் அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | குருணாகல் மயா கடவர அணைக்கட்டு அபிவிருத்தியின் போது ஆண்டின் இறுதிக் காலாண்டில் காணப்பட்ட மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக இச்செயற்திட்டத்தினை நிறைவு செய்ய முடியாதிருந்தது. மூன்று செயற் திட்டங்களை செயற்படுத்தும் பொறுப்பு கம்பஹா மாவட்ட செயலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தன. 2018 திசெம்பர் 05 ஆந் திகதி மேற்படி செயற்திட்டங்களை செயற்படுத்த முடியாதென மாவட்ட செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது. போதியளவு காலம் இல்லாமை காரணமாக வேறு செயற் திட்டங்களுக்கு இப்பணத்தை ஈடுபடுத்த முடியாமல் இருந்தது. இது தொடர்பாக மேலும் ஆராய்ந்து பார்த்த போது மேற்படி செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு பிரதேச சபைகளில் இருந்து உரிய இணக்கப்பாடுகள் கிடைக்காமை காரணமாக இருந்ததாக இனங்காணப்பட்டிருந்தது. |
| (உ) | பொலன்னறுவ மாவட்ட செயலகத்திற்கு மெதிரிகிரிய சுண்ணாம்புக் கால்நடைக்கு அருகிலுள்ள பாலத்தை நிர்மாணிப்பதற்கு ரூபா 2,894,542 | - மேற்படி - | இச்செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு ஆரம்ப நடவடிக்கை முடிவடைந்திருந்த போதிலும் மழையுடன் கூடிய சீரற்ற |

| | | |
|---|---|---|
| நிதிஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், அச்செயற்திட்டங்களை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | காலநிலையால் செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய முடியாமல் இருந்தது. |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வேறு அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த 02 வாகனங்கள் முறையாக கையேற்கப்படாமல் 2016 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. | வாகனங்களை முறையாக கையேற்கப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | WP-KJ-3870 மற்றும் WPKR 5664 ஆம் இலக்க வாகனங்கள் வேறு அமைச்சின் மூலம் இந்த அமைச்சிற்கு கையேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.<br>எவ்வாறாயினும், மேற்படி இரண்டு வாகனங்களும் தற்போது அமைச்சின் (தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள் மீள்குடியேற்றம் மற்றும் வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் கடமைகளுக்காக கையளிக்கப்பட்டுள்ளதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். |
| (ஆ) திறைசேரியின் பாதீட்டு திணைக்களத்தின் மூலம் லீசிங் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டுள்ள 02 வாகனங்கள் மற்றும் ரூபா 199,500 பெறுமதியான மோட்டார் சைக்கிள் ஒன்று உட்பட 03 வாகனங்கள் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. | விளைவற்று காணப்படட அரசாங்க வாகனங்களை நோக்கங்களுக்கு உட்பட செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட் வேண்டும் | WP-CAR-2498 ஆம் இலக்க வண்டி முன்னர் குழாமில் காணப்பட்ட வண்டியொன்றாக இருந்ததுடன் நிலைபேறான அபிவிருத்தி, வனசீவராசிகள், மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சு காணப்பட்ட சமயத்தில் 2018 யூன் 04 ஆந் திகதி வனசீவராசிகள் பொறுப்பிற்கு தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்தது. அவ்வண்டி மீண்டும் 2018 யூலை 02 அமைச்சு குழாமிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் பின்னர் அவ்வண்டி குழாம் கடமைகளில் ஈடுபடுத்துவதற்காக போதியளவு கடமை இல்லாதிருந்தமையால் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்க வில்லை.<br><br>WP-CAR-2528 ஆம் இலக்க வண்டி கௌரவ அமைச்சரின் பதவியணியின் உத்தியோகத்தர் ஒருவர் பயன்படுத்தும் வாகனமொன்றாக இருந்ததுடன் 2018 ஒக்தோபர் 26 ஆந் திகதி அமைச்சு மாற்றத்துடன் இப் பிரிவிற்கு போதியளவு கடமைகள் இல்லாதிருந்தமையால் அவ்வண்டி இதுவரை ஓட்டத்தில் |

| | | |
|---|---|---|
| | | ஈடுபடுத்தப்படவில்லை. WP-BFT-7735 ஆம் இலக்க மோட்டார் சைக்கிள் இந்த அமைச்சின் தபால் நடவடிக்கைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டது. பொருத்தமான உத்தியோகத்தர் இல்லாமை காரணமாக அம்மோட்டார் சைக்கிள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படவில்லை. |
| (இ) | மீளாய்வாண்டில் மாத மொன்றிற்கு ரூபா 162,500 விதம் செயற்பாட்டு குத்தகை தவணையின் கீழ் 02 புதிய வாகனங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், அவ்வாகனங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், மீளாய்வாண்டின் இறுதியில் இருந்து எதிர்வரும் 03 மாதங்களுக்கு காலப்பகுதிக்கு ரூபா 814,708 தவணைப்பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | WP PI 2358 ஆம் இலக்க கெப் வண்டி குழாம் நடவடிக்கைகளுக்காக செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனமொன்றாக இருந்ததுடன் அமைச்சு மாற்றத்துடன் 2019 ஆம் ஆண்டிற்காக செயற்படுத்த அபிவிருத்தி செயற்திட்டங்கள் அல்லது போதியளவு கடமைகள் இல்லாதிருந்தமையால் இவ்வாகனம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படவில்லை. இதன் காரணமாக செயற்பாட்டு முறைமையின் கீழ் வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட தனியார் நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டு குத்தகை உடன்படிக்கை இரத்து செய்யப்பட்டு இவ்வாகனத்தை மீண்டும் பொறுப்பளிப்பதற்கு 03 மாத காலம் எடுத்திருந்தது. அதன் பிரகாரம் 2019 மார்ச் 07 ஆந் திகதி உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு இவ்வாகனத்தை மீண்டும் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு ‘‘நிகழ்ச்சிநிரல்’’ பிரகாரம் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருப்பதுடன் மீளாய்வாண்டிற்குரியதாக பிரதேச அபிவிருத்தி அமைச்சினால் தமது விடயப்பரப்பின் கீழ் எடுக்கபடும் செயற்பாடுகளின் பிரகாரம் செயற்பட்டுள்ளதாக | அரச கொள்கை மற்றும் உரிய சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுப்பதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய குறிகாட்டிகளை இனங்காண்பது தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி சபையிடமிருந்து பதில் பெற்றுக் கொள்ளப்பட்டு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

அறிக்கையிடப்பட்டிருந்தது. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களாக வறுமையை குறைத்தல் மற்றும் பட்டினியை ஒழித்தல் என்பன இனங்காணப்பட்ட போதிலும் அந்நோக்கங்கள் மற்றும் இலக்குகள் நோக்கி அடையப்பட வேண்டிய அடைவுகள் உட்பட செயன்முன்னேற்றத்தை அளவிடுவதற்காக குறிகாட்டிகளை இனங்காணும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.